# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

## SUMMATIVE ASSESSMENT - I (2015 - 2016)

## CLASS : IX

| | | |
|---|---|---|
| **Maximum Marks : 90** | **TAMIL** | **Time 3 hours** |
| மதிப்பெண்கள் : 90 | **தமிழ்** | நேரம் : 3 மணி |

The question paper is diveded into four Sections.

இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | | |
|---|---|---|---|
| SECTION | **: A** | Reading Comprehension | - 15 Marks |
| பிரிவு | **: அ** | படித்தல் (உரைநடைப்பகுதி ) | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | **: B** | Writing | - 20 Marks |
| பிரிவு | **: ஆ** | எழுதுதல் | - 20 மதிப்பெண்கள் |
| SECTION | **: C** | Grammar | - 15 Marks |
| பிரிவு | **: இ** | இலக்கணம் | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | **: D** | Literature / Textbooks | - 40 Marks |
| பிரிவு | **: ஈ** | இலக்கியம் / தமிழ்ப்பாடநூல்கள் | - 40 மதிப்பெண்கள் |

எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

★ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

★ வினாத்தாள் 14 பக்கங்களைக் கொண்டது.

### பகுதி - I

1 ) **பின்வரும் பத்திகளைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடைவினாக்களுக்கு விடை தருக.**

தமிழில் வழங்கும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று கலம்பகம். புயவகுப்பு, அம்மானை, மறம், குறம், முதலிய பதினெட்டு உறுப்புகள் அமைய, நால்வகைப் பா இனங்களும் கலந்து வர, அந்தாதித் தொடையாக நூறு செய்யுள்களால் பாடப்படுவது கலம்பகம். தில்லையில் எழுந்தருளியுள்ள இறைவன் சிவபெருமான் மீது பாடப் பெற்றமையால் "தில்லைக் கலம்பகம்" என்னும் பெயரையும் இது பெற்றது.

"அம்மானை" என்பது மகளிர் விளையாட்டு வகைகளுள் ஒன்று.அம்மானை ஆடும் போது மகளிர் பாடும் பாட்டுக்கு "அம்மானை வரி" என்பது பெயர்.அப்பாடலில் ஒருத்தி ஒரு கருத்தைக் கூறுவாள்.இன்னொருத்தி அக்கருத்தை ஒரு வினா எழுப்பி மறுப்பாள். மற்றொருத்தி அவ்விருவருக்கும் பொருந்தும் வகையில் ஒரு செய்தியை விடையாகக் கூறுவாள்.இங்ஙனம் பாடிக் கொண்டே பந்துகளை உருட்டி விளையாடுவது அம்மானை விளையாட்டாகும்.

**வினாக்கள்** **5 x 1 = 5**

**i ) கலம்பகம் எந்த வகைகளுள் ஒன்று**

அ ) இதிகாச, இலக்கிய

ஆ) பிரபந்திலக்கிய

இ ) பேரிலக்கிய

ஈ ) சிற்றிலக்கிய

**ii ) எத்தனை உறுப்புகள் அமைய பாடப்படுவது கலம்பகம் ?**

அ ) பதினாறு உறுப்புகள் அமைய

ஆ) பதினெட்டு உறுப்புகள் அமைய

இ ) பதினான்கு உறுப்புகள் அமைய

ஈ ) பன்னிரண்டு உறுப்புகள் அமைய

**iii ) தில்லையில் எழுந்தருளியுள்ள இறைவன் யார் ?**

அ ) முருகன்

ஆ) திருமால்

இ ) இந்திரன்

ஈ ) சிவபெருமான்

**iv ) " அம்மானை" எவ்வகை விளையாட்டுகளில் ஒன்று ?**

அ ) மகளிர் விளையாட்டு வகைகளுள் ஒன்று

ஆ) ஆடவர் விளையாட்டுகளில் ஒன்று

இ ) ஆடவ, பெண்டீர் விளையாட்டுகளில் ஒன்று

ஈ) சிறுவர், மகளிர் விளையாட்டுகளில் ஒன்று

**v ) மகளிர் பாடும் பாட்டினை எவ்வாறு அழைப்பர் ?**

அ ) அம்மானைக்குயும்

ஆ) அம்மானை குறவை

இ ) அம்மானைக் கூத்து

ஈ ) அம்மானை வரி

2 ) சோழர் கோயில்களில் சிறந்து விளங்குவது தஞ்சை பெரிய கோவில் என அழைக்கப்படும் இராஜராஜேசுரம் ஆகும். 'தட்சிணமேருத் திருக்கற்றளி' எனவும் அழைப்பர்.எழில்மிகு சிற்பம் கொண்ட அடிப்பகுதி,விண்ணளாவும் விமானம்,அதன்மேல் ஸ்தூபி என்ற எண்பது டன் எடையுள்ள அரைவட்ட வடிவக்கல், அதற்கு மேல் செப்புக் குடம், தங்கத்தகடு போர்த்தப்பட்டு உள்ளது.கருவறை உள்ள பகுதி திருச்சுற்றின் மேற்கு பகுதியில் சிறிய கோயில்களும், மண்டபங்களும் அமைந்துள்ளன. இங்கு அமைந்துள்ள

பெரிய நந்தி சிறப்பு வாய்ந்தது. சிவன் கோயிலே ஆயினும் திருமாலின் பல்வேறு தோற்றங்களைக் காணலாம். இக்கோவிலின் உள் சுவர்களில் அழகிய ஓவியங்கள் உள்ளன. இந்த கோவிலின் உயர்ந்த விமானம் போல வேறு எங்கும் இல்லை.இக்கோயில் கலைச்சிறப்பு உடையது மட்டும் அன்று. சமுதாய பொருளாதார அரசியல் சமய வரலாறு கூறும் மெய்க்கீர்த்தியினை உடையது. தமிழர்களின் கட்டடக்கலைக்குச் சிறந்த ஒரு சான்றாக விளங்குகின்றது.

<u>வினாக்கள்</u> **5 x 1 = 5**

**i ) 'தட்சிணமேருத் திருக்கற்றளி' என அழைக்கப்படுவது**

அ ) மாமல்லபுரம் குகைக் கோவில்கள்

ஆ) தஞ்சை பெரிய கோவில்

இ ) திருத்தணி முருகன் கோவில்

ஈ ) மதுரை மீனாட்சி அம்மன் கோவில்

**ii ) தஞ்சை பெரிய கோவிலில் இடம் பெற்றுள்ள ஸ்தூபியின் எடை**

அ ) எண்பது டன்

ஆ) தொண்ணூறு டன்

இ ) எட்டு டன்

ஈ ) எண்ணூறு டன்

**iii ) கோவில் உள் சுவர்களில் காணப்படுவது**

அ ) அழகிய ஓவியங்கள்

ஆ) கற்றளி

இ ) சிற்பங்கள்

ஈ ) மூலிகைச்செடிகள்

**iv ) சிறிய கோயில்களும், மண்டபங்களும் அமைந்து பகுதி**

அ ) திருச்சுற்றின் கிழக்குப் பகுதி

ஆ) திருச்சுற்றின் மேற்குப் பகுதி

இ ) திருச்சுற்றின் வடக்குப் பகுதி

ஈ ) திருச்சுற்றின் தெற்குப் பகுதி

**v ) பெரிய கோவில் கட்டப்பட்டது**

அ ) சேரர்கள் காலத்தில்

ஆ) சோழர்கள் காலத்தில்

இ ) பாண்டியர்கள் காலத்தில்

ஈ ) பல்லவர்கள் காலத்தில்

3 ) சாளுக்கிய மன்னன் சுத்தோதனின் மனைவி மாயாதேவி ஒரு கனவு கண்டாள். ஆறு கதிர்களைக் கொண்ட ஒளிமிக்க மீன் ஒன்று கனவில் தோன்றியது. அந்த மீன் தேவலோக வெள்ளை யானை போல் நிறங்கொண்டு வானை விட்டு இறங்கி வலப்புறமாக வந்து அரசியின் வயிற்றுள் புகுந்தது. இந்தக் கனவு வழி எல்லா நாடுகளும், உயிர்களும் இன்புறும் என்று தெரிந்தது. கனவு கண்டதும் மாயாவதி தூக்கத்தில் இருந்து விழித்து மிக்க மகிழ்ச்சி அடைந்தாள். இறைவன் திருவருளை எண்ணி வியந்து எந்தத் தாயும் கண்டறியாத களிப்பினை எய்தினாள்.மாயாவதி கருவுற்றதும் உலகில் பல அற்புதங்கள் நிகழ்ந்தன.காலைக் கதிரவன் உதிக்கும் முன்னரே ஆசியாக் கண்டம் முழுவதிலும் ஒளி நிறைந்தது. அதில் கடல் அலைகள் அடங்கின. பட்ட மரங்கள் தளிர்த்தன. பாழுங்கிணறு களில் நீர் சுரந்தது. மணற்காட்டிலும், சுடு காட்டிலும் மலர்கள் பூத்து மணம் பரப்பின. நீர் நிலைகளில் தாமரைகள் மலர்ந்தன.சோலைகள் பொன்னிறம் பெற்றன.உலகெங்கும் மகிழ்ச்சியும் , ஒளியும் நிரம்பின.

<u>வினாக்கள்</u> **5 x 1 = 5**

**i ) சாளுக்கிய நாட்டை ஆண்ட மன்னன்**

அ) தேவ தத்தன்

ஆ) நரசிம்ம பல்லவன்

இ) மாற வர்மன்

ஈ ) சுத்தோதனன்

**ii ) மாயாவதி கனவில் தோன்றியது**

அ) வெள்ளை யானை

ஆ) ஒளி மிக்க மீன்

இ) தாமரை மலர்கள்

ஈ ) நடனமாடும் மயில்

**iii ) கனவு கண்டதும் மாயாவதி தூக்கத்தில் இருந்து விழித்து**

அ) கவலை கொண்டாள்

ஆ) துக்கமடைந்தாள்

இ ) வேதனையுற்றாள்

ஈ ) மிக்க மகிழ்ச்சி அடைந்தாள்.

**iv ) மாயாவதி கருவுற்றதும் உலகில்**

அ) அற்புதங்கள் நிகழ்ந்தன.

ஆ) ஆழி அலைகளால் அழிவுகள் ஏற்பட்டன

இ) இருள் சூழ்ந்தது

ஈ ) நிலநடுக்கம் ஏற்பட்டது

v ) பாழுங்கிணறு என்பது

அ) பழுது நீக்கப்பட்ட கிணறு

ஆ) தீர்த்தக் கிணறு

இ) உவர்கேணி

ஈ ) பாழடைந்த கிணறு

## பகுதி - II

1 x 8 = 8

4 ) உன்னுடைய மாமா உனக்கு அனுப்பிய பிறந்தநாள் பரிசுக்கு நன்றி தெரிவித்து ஒரு கடிதம் எழுதுக.

( அல்லது )

உமது பகுதியில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு குறித்தும் அதனைச் சரிசெய்ய வேண்டியும் தமிழ்நாடு மின்சார வாரிய ஆணையருக்கு ஒரு கடிதம் எழுதுக.

**எக்கடிதமாயினும் உமது முகவரி,**

ராஜா / ராதா , திருவள்ளுவர் வீதி, இராயப்பேட்டை , சென்னை - 600 014.

1 x 8 = 8

**5 ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில் ஏதேனும் ஒன்றிற்குக் கட்டுரை எழுதுக.**

அ ) முன்னுரை - முயற்சியின் பெருமை - முயற்சி திருவினையாக்கும் - முயற்சியின் பெருமை - முயற்சி திருவினையாக்கும் - முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் முயற்சியால் முன்னேறியவர்கள் - முடிவுரை.

ஆ ) முன்னுரை - நெடுநாள் வாழ - வைகறைத் துயில் எழல் - உடல் தூய்மை - உணவுத் தூய்மை - சுற்றுப்புறம் - முடிவுரை.

இ ) முன்னுரை - மனிதனின் வாழ்க்கை - பணத்தின் தேவை - நல்வழியில் பொருளீட்டல் - சிக்கனத்தின் அவசியம் - எதிர்காலத் தேவைகள் - முடிவுரை.

6 ) வனவிலங்கு பூங்கா திறப்பு விழா குறித்து அறிக்கை எழுதுக. 1 x 4 = 4

( அல்லது )

உனது பள்ளியில் நடந்த ஆசிரியர் தின விழா குறித்து அறிக்கை எழுதுக.

## பகுதி - III

7 ) சான்று தருக. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

**i ) ஒற்றளபெடை**

அ) உழா அர்

ஆ) அரங்ங்கம்

இ) கெடுப்பதூ உம்

ஈ) தழீஇ

**ii ) பெயர்ப் பகுபதம்**

அ) நடிகன்

ஆ) காண்

இ) மன்

ஈ) நாய்

**ii ) எண்ணல் அளவை ஆகுபெயர்**

அ) ஒன்று பெற்றால் ஒளி மயம்

ஆ) ஐந்து கிலோ என்ன விலை ?

இ) ஒரு மாம்பழம் கொடு

ஈ) மூன்று மீட்டர் கொடு

**iv ) வினையாலணையும் பெயர்**

அ) ஆடல்

ஆ) நோக்கம்

இ) பெற்றான்

ஈ) கருமை

**v ) இல்பொருளுவமையணி**

அ) தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

ஆ) அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

இ) கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

ஈ ) ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

8 ) நிரப்புக. ( மூன்று மட்டும் ) **3 x 1 = 3**

**i) அளபு என்னும் சொல்லுக்கு ______________ என்று பொருள்.**

அ) மாத்திரை

ஆ) ஒழுக்கம்

இ) பிரிவு

ஈ) எடுத்தல்

**ii ) ஒற்றளபெடையாக அளபெடுக்கும் மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை _______.**

அ) பதினெட்டு

ஆ) பன்னிரெண்டு

இ) முப்பது

ஈ ) பத்து

**iii ) குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார் - என்பது ___________.**

அ) திணைவழுவமைதி

ஆ) திணை வழு

இ) கால வழுவமைதி

ஈ ) கால வழு

**iv ) கீரையோஒ கீரை - என்பது ___________ .**

ஆ) அளபெடை

ஆ) ஆகுபெயர்

இ) வழு

ஈ ) வழுவமைதி

**v ) ஆசிரியப்பாவிற்கு உரிய சீர்கள் ___________ ஆகும்.**

அ) ஓரசைச்சீர்

அ) ஈரசைச்சீர்

இ) மூவசைச்சீர்

ஈ) நாலசைச்சீர்

9 ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க. ( மூன்று மட்டும் ) **3 x 1 = 3**

**i) தில்லையம்பலம் ( அசை பிரித்து எழுதுக )**

அ) நேர் / நிரை / நேர்

ஆ) நேர் / நிரை / நிரை

இ) நேர் / நேர் / நேர்

ஈ ) நிரை / நிரை / நிரை

**ii ) நாய் கத்தும் ( வழு நீக்கி எழுதுக )**

அ) நாய் ஊளையிடும்

ஆ) நாய் உறுமும்

இ) நாய் கரையும்

ஈ ) நாய் குரைக்கும்

**iii ) தங்கம் ( அசை பிரித்து வாய்ப்பாடு தருக )**

அ) தேமா

ஆ) புளிமா

இ) கருவிளம்

ஈ ) கூவிளம்

**iv ) வெண்ணிலா ( பண்புப்பெயர் எவ்வகையைச் சார்ந்தது ? )**

அ) நிறம்

ஆ) வடிவம்

இ ) அளவு

ஈ ) சுவை

**v ) ஒரு கிலோ புளி கொடு ( ஆகுபெயர் ஆக்குக )**

அ) புளி கொடு

ஆ) புளி வாங்கி வா

இ) ஒரு கிலோ கொடு

ஈ ) ஒரு கிலோ புளி வாங்கி வா

**10 ) இலக்கணக்குறிப்பு தருக. ( மூன்று மட்டும் )** **3 x 1 = 3**

**i) கோடல்**

அ) பண்புப்பெயர்

ஆ) தொழிற்பெயர்

இ) வினையாலணையும் பெயர்

ஈ ) பெயர்ச்சொல்

**ii ) இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்**
**துறந்தார் துறந்தார் துணை.**

ஆ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்

ஆ) மொழிமாற்றுப் பொருள்கோள்

இ) விற்பூட்டுப் பொருள்கோள்

ஈ ) தாப்பிசைப் பொருள்கொள்

**iii ) நிரைபு**

அ) நாள்

ஆ) மலர்

இ) காசு

ஈ ) பிறப்பு

**iv ) நசைஇ**

அ) செய்யுளிசை அளபெடை

ஆ) இன்னிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை

ஈ ) ஒற்றளபெடை

**v ) நாங்கள் வந்தார்கள்**

அ) திணை வழு

ஆ) பால் வழு

இ) இட வழு

ஈ) கால வழு

**11 ) சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.(மூன்று மட்டும் ) 3 x 1 = 3**

**i)** அ) காய்ச்சீர் வெண்பா உரிச்சீர் என அழைக்கப்படுகிறது.

ஆ ) காய்ச்சீர் வெண்பா பொதுச்சீர் என அழைக்கப்படுகிறது.

இ ) காய்ச்சீர் வஞ்சியுரிச்சீர் என அழைக்கப்படுகிறது.

ஈ ) காய்ச்சீர் ஈரசைச்சீர் என அழைக்கப்படுகிறது.

**ii)** அ) பசுவைப் பார்த்து ' என் இலட்சுமி வந்துவிட்டாள் ' என்று கூறுவது திணைவழுவமைதி.

ஆ) பசுவைப் பார்த்து ' என் இலட்சுமி வந்துவிட்டாள் ' என்று கூறுவது திணைவழு.

இ) பசுவைப் பார்த்து ' என் இலட்சுமி வந்துவிட்டாள் ' என்று கூறுவது வினாவழு.

ஈ ) பசுவைப் பார்த்து ' என் இலட்சுமி வந்துவிட்டாள் ' என்று கூறுவது விடைவழு.

**iii)** அ) மை, ஐ, சி, பு என்பன தொழிற்பெயர் விகுதிகள் ஆகும்.

ஆ) மை, ஐ, சி, பு என்பன பண்புப்பெயர் விகுதிகள் ஆகும்.

இ) மை, ஐ, சி, பு என்பன பலர்பால் விகுதிகள் ஆகும்.

ஈ ) மை, ஐ, சி, பு என்பன பெண்பால் விகுதிகள் ஆகும்.

**iv)** அ) பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது சந்தி.

ஆ) பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது சாரியை.

இ) பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது விகாரம்.

ஈ) பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது இடைநிலை.

v) அ) கடி - என்பது பெயர்ப் பகாப்பதம்.
ஆ) கடி - என்பது வினைப் பகாப்பதம்.
இ) கடி - என்பது இடைப் பகாப்பதம்.
ஈ ) கடி - என்பது உரிப் பகாப்பதம்.

## பகுதி - IV

**12 ) பின்வரும் பத்தியைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

தமிழ்நாட்டு வணிக வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்தது. பழங்காலந்தொட்டே தமிழர் உள்நாட்டு, அயல்நாட்டு வணிகத்தில் சிறப்புற்றிருந்தனர்.உள்நாட்டு வணிகத்தை விட அயல்நாட்டு வணிகத்திலேயே வருவாய் மிகுதி. அயல்நாட்டு வணிகத்திலும் நிலத்தின் வழியாகச் செய்யும் வணிகத்தை விட, நீரின் வழியாகச் செய்யும் வணிகம் பெரும் பொருளைத் தரும்.எனவே, அந்நாளில் கடல்வணிகம் மிகவும் சிறந்திருந்தது. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்னும் ஔவைமொழியும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் கணியான் பூங்குன்றன் மொழியும், தமிழர்களின் உலகளாவிய சிந்தனைக்கும் பன்னாட்டுத் தொடர்புக்கும் சான்றுகளாம்.

<u>**வினாக்கள்**</u> **5 x 1 = 5**

**i) தொன்மை என்பதன் பொருள்**

அ) பழமை
ஆ) புதுமை
இ) மென்மை
ஈ ) எளிமை

**ii ) தமிழர்கள் வருவாய் மிகுதியாக ஈட்டியது**

அ) வெளிநாடு வாணிபத்தில்
ஆ) உள்நாடு வாணிபத்தில்
இ ) வேளாண்மைத்தொழிலில்
ஈ ) நெசவுத்தொழிலில்

**iii ) கடல் வணிகம் என்பது**

அ) கலத்தின் வழியாகச் செய்யும் வியாபாரம்
ஆ) விமானத்தின் வழியாகச் செய்யும் வியாபாரம்
இ) நிலத்தின் வழியாகச் செய்யும் வியாபாரம்
ஈ ) சிறு கடைகள் மூலம் செய்யும் வியாபாரம்

**iv ) திரைகடல் ஓடியும் திரவியம் தேடு - என்று கூறியது**

அ) திருவள்ளுவர்

ஆ) கணியான் பூங்குன்றன்

இ ) ஔவையார்

ஈ ) காக்கைப் பாடினியார்

**v ) தமிழர்களின் உலகளாவிய சிந்தனைக்குச் சான்றாக விளங்குவது**

அ) யாதும் ஊரே யாவரும் கேளிர்

ஆ) இளமையில் கல்

இ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

ஈ ) ஐயமிட்டு உண்.

13 ) இருபதாம் நூற்றாண்டில் அறிவியலும், இலக்கியமும் விரைவாக வளர்ந்தன. காலம் பல கண்ட தமிழ்மொழியும் புத்தம் புதிய இலக்கிய வகைகளை ஏற்றுத் துறை தோறும் நன்கு வளர்ந்து தழைத்தது. செய்யுள், உரைநடை எனும் இரு வடிவிலும் புதுவகை இலக்கியங்கள் மலர்ந்தன.இருபதாம் நூற்றாண்டின் உரை வளத்தைக் கருத்திற்கொண்டு நொக்கும் போது இக்காலத்தை உரைநடைக்காலம் எனலாம். எனினும், கவிதை வடிவமும் கவினுற வளர்ந்து வந்தது.இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகனார், நாமக்கல் இராமலிங்கனார் எனக் கவிஞர்கள் பலர் தோன்றி, நாடு,மொழி,இனம்,சமுதாயம்,கலை எனப் பலவற்றைப் பாடினர்.

<u>வினாக்கள்</u> **5 x 1 = 5**

**i) இருபதாம் நூற்றாண்டில் விரைவாக வளர்ந்தவை**

அ) ஆடலும், பாடலும்

ஆ) கலையும், இலக்கியமும்

இ) சமுதாயமும், பண்பாடும்

ஈ ) அறிவியலும், இலக்கியமும்

**ii ) தழைத்தது - என்னும் சொல்லின் பொருள்**

அ) தளர்ந்தது

ஆ) தவறியது

இ ) தலை தூக்கியது

ஈ ) செழித்தது

**iii ) புதுவகை இலக்கியங்களின் இரு வடிவங்கள்**

அ) செய்யுள், இலக்கணம்

ஆ) அக இலக்கணம், புற இலக்கணம்

இ) செய்யுள், உரைநடை

ஈ ) இசையும், நடனமும்

**iv ) உரைநடைக்காலம் என அழைக்கப்படுவது**

அ) ஏழாம் நூற்றாண்டு

ஆ) ஒன்பதாம் நூற்றாண்டு

இ) இருபதாம் நூற்றாண்டு

ஈ) பதினெட்டாம் நூற்றாண்டு

**v ) அழகு - என்னும் பொருள்படும் சொல்**

அ) கவின்

ஆ) இனம்

இ) வடிவம்

ஈ ) துறை

14 ) பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து, தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.

தேய்ந்த நாண்மதிக் கண்ணியால் நுதல்விழிச் செந்தீப்
பாய்ந்த வெம்மையில் பொறாதுபொற் பங்கயத் தடத்துள்
ஆய்ந்த நாவலன் போய்விழுந் தாழ்ந்தனன் அவனைக்
காய்ந்த நாவலன் இம்மெனத் திருவுருக் கரந்தான்.

<u>வினாக்கள்</u> **4 x 1 = 4**

**i) ஆய்ந்த நாவலன் யார் ?**

அ) பாண்டிய மன்னன்

ஆ) நக்கீரர்

இ) சிவபெருமான்

ஈ) தருமி

**ii ) தாமரையைக் குறிக்கும் சொல் எது ?**

அ) நாண்மதி

ஆ) கண்ணி

இ) தடம்

ஈ) பங்கயம்

**iii ) நுதல் விழி - பொருள் தருக.**

அ) கருமையான கண்

ஆ) சிவந்த கண்

இ) நெற்றிக்கண்

ஈ) மான்கண்

**iv ) மறைந்தான் - என்ற பொருளைக் குறிக்கும் சொல் எது ?**

அ) தாழ்ந்தனன்

ஆ) கரந்தான்

இ) காய்ந்த

ஈ) பொறாது

**5 ) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக. 2 x 5 = 10**

அ) இக்கால மரபுக்கவிஞர்கள் எவரேனும் இருவரின் கவித்திறத்தை விளக்குக.

ஆ) தமிழின் சிறப்புகளைத் திராவிட மொழிகள் பாடத்தின் வழி விளக்குக.

இ) புதுக்கவிதை தோன்றி வளர்ந்த முறை பற்றி எழுதுக.

ஈ) அக்காலத்தில் பூம்புகார் எவ்வாறு விளங்கியது ?

உ) தமிழகத்தின் பழங்காலத் துறைமுகங்கள் பற்றியும், அங்கு நடைபெற்ற வணிகம் பற்றியும் விளக்குக.

**6) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.**

அ) இறைவனின் இயல்புகளாகக் கம்பர் கூறுவன யாவை ? **2 x 4 = 8**

ஆ) விதுரன் தூது சென்றதைத் தொகுத்தெழுதுக.

இ) பொறையுடைமையின் சிறப்புகள் யாவை ?

ஈ) சிறுபஞ்சமூலம் பெயர்க்காரணம் மற்றும் வனப்புகளாகக் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

**17) பின்வரும் துணைப்பாட வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விரிவான விடை தருக.** **1 x 8 = 8**

அ) கண்ணதாசனின் கவியின்பத்தை விவரி.

ஆ) கெலன் கெல்லர் எவ்வாறு கல்வி கற்றார் ?

இ) ரஷீத்துக்கு மாங்கன்று எவ்வாறு கிடைத்தது ? அதனை அவர் எவ்வாறு வளர்த்தார் ?